புதுச்சேரி அரசு
பள்ளிக் கல்வி இயக்ககம்
*****

நாள்:16 -06-2017

# செய்திக் குறிப்பு

உத்தராகண்ட் மாநிலம், டேராடூனில் அமைந்துள்ள இந்திய தேசிய இராணுவ கல்லூரியில் எட்டாம் வகுப்பில் சேர்வதற்கான விண்ணப்பத்தை (ஆண்கள் மட்டும்) 30-09-2017 க்குள் விண்ணப்பிக்கலாம்.

நுழைவுத் தேர்வு எழுதும் மாணவருக்கு 01-07-2018 அன்று 11 ½ வயதுக்குக் குறையாமலும், 13 வயது பூர்த்தியாகாமலும் இருத்தல் வேண்டும். அதாவது 02-07-2005 க்கு முன்னரும் 01-01-2007-க்கு பின்னரும் பிறந்திருக்கக் கூடாது. மாணவர்கள் 01-07-2018-ல் இக்கல்லூரியில் சேரும்பொழுது ஏழாம் வகுப்பு பயிலுபவராக அல்லது தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

**மாணவர்களைத் தேர்வு செய்யும் முறை**

- 01-12-2017 அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை ஆங்கிலத் தேர்வும், அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.30 மணி வரை கணிதத் தேர்வும் நடைபெறும்.
- 02-12-2017 அன்று காலை 10.00 மணி முதல் 11.00 மணிவரை பொது அறிவுத் தேர்வு நடைபெறும் (மேற்கண்ட கணிதம் மற்றும் பொது அறிவுத் தேர்வுகளை ஆங்கிலம் அல்லது ஹிந்தி மொழியில் எழுதலாம்)
- எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வு 05-04-2018 அன்று நடைபெறும்.
- நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதம் மார்ச் மாத ஆரம்பத்தில் மாணவர்களுக்கு அனுப்பப்படும்.
- நேர்முகத் தேர்விற்குப்பின் தேர்வு செய்யப்படும் மாணவர்கள், தேர்வு செய்யப்பட்ட இராணுவ மருத்துவமனைகளில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மேலும் மருத்துவ சோதனை சேர்க்கையின் ஓர் அங்கமே தவிர சேர்க்கையின் இறுதி கட்டம் அல்ல என்பதை அறியவும்.

**தேர்வு மையம்**

புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவர்களுக்கு, புதுச்சேரியில் மேற்குறித்த தேதிகளில் எழுத்துத் தேர்வுகள் நடைபெறும். தேர்வு மையம் குறித்த தகவல் மாணவர்களுக்கு இணை இயக்குநர் அலுவலகத் தேர்வுப்பிரிவால் அஞ்சல் வழி மூலம் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் பெற்றிட**

விண்ணப்பப் படிவத்தை பதிவு விரைவு அஞ்சல் மூலம் பெற்றிட, தெளிவான அஞ்சல் குறியீட்டு எண் உள்ள விலாசம் மற்றும் தொடர்பு எண் ஆகியவற்றுடன் கூடிய கோரிக்கை மனுவுடன், **"THE COMMANDANT RIMC DEHRADUN", DRAWEE BRANCH, STATE BANK OF INDIA, TEL BHAVAN, DEHRADUN,(BANK CODE-01576), UTTARAKHAND.** கிளையில் மாற்றத்தக்க, பொதுப்பிரிவினர் ரூ.600/- தொகைக்கும், அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினர் அதற்குண்டான சாதி சான்றிதழுடன் ரூ.555/- தொகைக்கும் கேட்பு வரைவோலை (Account Payee Bank Demand Draft) மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**THE COMMANDANT,
RASHTRIYA INDIAN MILITARY COLLEGE,
GARHI CANTT.,
DEHRADUN,
UTTARAKHAND - 248 003.**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், கீழ்காணும் முகவரிக்கு 30-09-2017 க்குள் வந்துசேர வேண்டும்.

**இணை இயக்குநர்
இரண்டாம் தளம், அ - அடுக்ககம்
பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு கல்வி வளாகம்,
அண்ணா நகர், புதுச்சேரி 605 005.**

(ஜெ.கிருஷ்ணராஜு)
இணை இயக்குநர் (மேனிலைக் கல்வி)

இந்த செய்திக் குறிப்பினை தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் வெளியிட / ஒளிபரப்ப அன்போடு வேண்டுகிறேன்.

(ஜெ.கிருஷ்ணராஜு)
இணை இயக்குநர் (மேனிலைக் கல்வி)